# 20-06-2024 செய்தி

## முதலீட்டாளர்களின் ஈர்ப்பில் மாற்றம்!

### Sub-prime crisis

- 2007-2008-ஆம் ஆண்டில் அமெரிக்க கடன் சந்தையில் ஏற்பட்ட நெருக்கடி, அந்த நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்தது மட்டுமல்லாமல், உலக அளவில் இந்தியா உள்பட பெரும்பாலான நாடுகள் கடும் பொருளாதாரச் சிக்கலை எதிர்கொள்ள வழிவகுத்தது.
- இருப்பினும், இந்திய மக்களின் சேமிப்புப் பழக்கம் கைகொடுத்தால், பொருளாதார நெருக்கடியை அரசு வெகுவாக சமாளிக்க முடிந்தது.

### Ukrain Russia Corona

- இதைத் தொடர்ந்து 2020-இல் ஏற்பட்ட கரோன பாதிப்பு காரணமாக இந்தியா உள்பட பல்வேறு நாடுகளில் தொழில்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.
- பொருளாதார வளர்ச்சியில் இதன் தாக்கத்தை நாம் அறிவோம்.
- தற்போது ரஷியா-உக்ரைன் போர் நிலைமையும் கவலை அளிக்கும் விஷயமாக உள்ளது. போர் தொடர்ந்து நீடிக்கும் நிலையில், பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரம் கேள்விக்குறியாகும் வாய்ப்பு இருப்பதாக வல்லுநர்கள் எச்சரித்து வருவதைக் காணலாம்.
- இந்த நிலையில், முதலீடு என்று பார்க்கும்போது மக்களில் பலர் பங்குச்சந்தை, பரஸ்பர நிதி (மியூச்சுவல் ஃபண்ட்), கடன் பத்திரங்கள், அரசின் பத்திரங்கள் உள்ளிட்டவற்றில் முதலீடு செய்து வருகிறார்கள்.

**மியூச்சுவல் ஃபண்ட்**

- சில ஆண்டுகளாக மியூச்சுவல் ஃபண்ட் என்று கூறப்படும் பரஸ்பர நிதித் திட்டங்களில் மக்களின் முதலீடுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.
- 10 ஆண்டுகளில் மியூச்சுவல் ஃபண்டின் ஒட்டுமொத்த ஆண்டு சொத்து மதிப்பு அதிர்ச்சியூட்டும் வகையில் 6 மடங்கு வளர்ச்சி கண்டுள்ளது.
- பொதுமக்களில் பலர் கடந்த சில ஆண்டுகளாக இடர்ப்பாடு மிகக் குறைவாக உள்ள முதலீட்டுத் திட்டங்களைத் தேடத் தொடங்கிவிட்டதை நன்றாக அறியமுடிகிறது.

**அதிகரிப்பு**

- அந்த வகையில், முதலீட்டாளர்கள் மியூச்சுவல் ஃபண்ட் (எம்.எஃப்) திட்டங்களில் முதலீடுகளை அதிகரித்து வருகின்றனர்.
- இந்த ஆண்டு நிலவரப்படி, இந்திய மியூச்சுவல் ஃபண்ட் நிர்வாகத்தின் கீழ் சுமார் 50-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் செயல்படுகின்றன.
- 10 ஆண்டுகளுக்கு முன்பு, ரூ.9 லட்சம் கோடியாக இருந்த அவற்றின் சொத்து மதிப்பு, தற்போது ரூ.54.54 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.
- மியூச்சுவல் ஃபண்டுகளில் முதலீடு செய்யப்பட்ட ரூ.1 லட்சம் இப்போது பெரிய இடர்ப்பாடு ஏதும் இல்லாமல் 3 முதல் 4 மடங்கு உயர்ந்துள்ளது.
- முதலீட்டாளர்களில் பலர் எஸ்ஐபி என்று சொல்லப்படும் முறையான முதலீட்டுத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.
- குறிப்பாக முதலீட்டாளர்கள் ஈக்விட்டி 'எஸ்ஐபி'-க்களுக்கு மாறி வருவது தெளிவாகத் தெரிகிறது.
- ஆனால், இந்திய பங்குச் சந்தைகளில் முதலீட்டாளர்கள் கண்ட 20 ஆண்டுகால ஏற்ற-தாழ்வுகளின் ஒட்டுமொத்த தாக்கம் தான் இதற்கு காரணமாகும்.

## 2021-ல் காற்று மாசால் 81 லட்சம் பேர் உயிரிழப்பு: இந்தியாவில் மட்டும் 21 லட்சம்

- இதில் உலகின் மிகப்பெரிய மக்கள் தொகைக் கொண்ட இந்தியாவில் 21 இலட்சம் பேரும், சீனாவில் 23 லட்சம் பேரும் காற்று மாசால் உயிரிழந்துள்ளனர்.
- அமெரிக்காவைச் சேர்ந்த ஹெல்த் எஃபெக்ட்ஸ் (எச்இஐ) நிறுவனம் ஐ.நா.வின் 'யுனிசெஃப்' அமைப்புடன் இணைந்து நடத்திய ஆய்வின் முடிவுகளை அறிக்கையாக வெளியிட்டது.

**என்ன செய்யும் இந்த பிஎம் 2.5?**

- சுற்றுப்புற காற்றில் இருக்கும் 2.5 மைக்ரோமீட்டருக்கும் குறைவான விட்டம் கொண்ட இந்த சிறிய நுண்ணியதுகள்கள், சுவாசக் காற்றின்மூலம் நுரையீரலில் நுழைந்து, ரத்த ஓட்டத்தில் ஊடுருவ வாய்ப்புள்ளது.
- தொடர்ந்து நமது உடலின் பல்வேறு உறுப்பு அமைப்புகளை பாதித்து, வயது முதிர்ந்தவர்களுக்கு இதய நோய் பக்கவாதம், சர்க்கரை நோய், நுரையீரல் புற்றுநோய் போன்ற தொற்று நோய்களின் அபாயத்தை அதிகரிக்கும் வல்லமை கொண்டது.
- உலகெங்கிலும் உள்ள மோசமான சுகாதார பாதிப்புகளுக்கு இந்த பிஎம் (P.M) 2.5 முக்கிய காரணியாகக் கண்டறியப்படுகிறது.

**காற்றுமாசால் உயிரிழப்பு**

| | | |
|---|---|---|
| சீனா | - | 23,00,000 |
| இந்தியா | - | 21,00,000 |
| பாகிஸ்தான் | - | 2,56,000 |
| வங்கதேசம் | - | 2,36,300 |
| மியான்மர் | - | 1,01,600 |
| இந்தோனேசியா | - | 2,21,600 |
| வியட்நாம் | - | 99,700 |
| பிலிப்பைன்ஸ் | - | 98,209 |
| நைஜீரியா | - | 2,06,700 |
| எகிப்து | - | 1,16,500 |